வலயக் கல்வி அலுவலகம் - மட்டக்களப்பு

2026 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான

கணிப்பீடு – 02

பகுதி - i

சுட்டெண் :..... நேரம்: 1மணித்தியாலயம்

1) இடம் பெயர்ந்து செல்வதில் ஒத்த இயல்பு உள்ள பிராணிகள் இரண்டினதும் ஆங்கில எழுத்துக்களைத் தெரிவு செய்க.



A



B



C




D




E

1) A யும் E யும் 2) C யும் B யும் 3) B யும் D யும்

2) C , D ஆகிய உருக்களிடையே உள்ள வேறுபாடுகளின் எண்ணிக்கை எத்தனை?




உரு C



உரு D


1) நான்கிலும் குறைவாகும் 2) நான்காகும் 3) நான்கிலும் கூடவாகும்

3) தரப்பட்ட உருக்களின் ஒழுங்கை அவதானித்து அடுத்து வரும் உருவைத் தெரிவு செய்க.




.....


(1)



(2)




(3)




www.lkedu.lk

4) ஒரே அளவான கனசதுரக் குற்றிகளைக் கொண்டு இவ்வுரு அமைக்கப்பட்டள்ளது. எனின் இவ்வுருவில் உள்ள சிறிய கனசதுரக்குற்றிகள் எத்தனை?



1) 42 2) 54 3) 45

5) பின்வரும் உருவில் ஒரு நிகழ்வின் நான்கு சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. இச்சந்தர்ப்பங்களின் ஒழுங்குமுறை யாது?



A B C D E

(1) E, B, A, D, C (2) D, B, A, E, C (3) D, A, B, E, C

6) ஒரு பாடசாலையில் பிள்ளைகளை நிரைக்கு 8 ஆக நிறுத்திய போதும் 7 ஆக நிறுத்திய போதும் 6 ஆக நிறுத்திய போதும் 5 பிள்ளைகள் எஞ்சினர். எனின் பாடசாலையில் உள்ள மிகக் கூடிய பிள்ளைகள் எத்தனை?


(1) 336 (2) 346 (3) 341

7) 12345, 17895, 87395 என்னும் மூன்று குறியீட்டுக் கூட்டங்களுக்கும் முறையே பொருத்தமான சொற்கள் இடம்பெறும் விடை யாது?

1) சக்கரம், துத்தகனம், சத்துனம்

2) சக்கரம், சத்துனம் , துத்தகனம்

3) சத்துனம், சக்கரம், துத்தகனம்

8) 


இங்கு நான்கு அட்டைகளிலும் உள்ள உரோமன் எண்களை இறங்குவரிசைப்படி வைத்தால் உருக்கள் இருக்கும் ஒழுங்குமுறை யாது?

(1) ⬡, □, △, ⬠ (2) ⬡, △, ⬠, □ (3) ⬠, □, △, ⬡


www.ikedu.lk


9) 22 சென்ரிமீற்றர் உயரமுள்ள ஒரு போத்தலில் 8 சென்ரிமீற்றர் உயரத்திற்கு நீர் உள்ளது. இந்நீரின் அளவானது போத்தல் கொள்ளும் நீரின் மொத்த அளவில் அரைவாசியாகும். நீர் வெளியே செல்லாதவாறு மூடியை மூடிப் போத்தலைக் கவிழ்க்கும் போது நீர் மட்டத்தின் உயரம் சென்ரிமீற்றரில் தருக?


1) 14 cm 2) 11 cm 3) 30 cm




10) நிரோஜி வீட்டிலிருந்து மேற்குத் திசை நோக்கி 50m சென்று, அதன் பின்னர் தனது இடது கைப்பக்கம் திரும்பி 25m தூரம் சென்று, அதன் பின் வலது கைப்பக்கம் திரும்பி 50m தூரம் சென்றாள். அதன் படி அவள் பயணித்த பாதையைத் தெரிவு செய்க.

(1) 

(2) 

(3) 

11) இவ்வுருவிலுள்ள சதுரங்களின் எண்ணிக்கை யாது?



1) 16 2) 20 3) 18


12) ஒரு வட்ட ஓட்டப் பாதையின் உள் எல்லையின் நீளம் 200 மீற்றர் ஆகும். ஒவ்வொரு 10 மீற்றர் தூரத்திலும் ஒரு கொடி வீதம் முதலாவதாக ஒரு மஞ்சள் நிறக் கொடியும் இரண்டாவதாக ஓர் ஊதா நிறக்கொடியும் மூன்றாவதாக ஒரு வெள்ளை நிறக் கொடியும் என்றவாறு இம்மூன்று நிறங்களிலும் கொடிகள் நடப்பட்டன. இவ்வொழுங்குமுறையில் குறித்து முடிக்கும் போது சம எண்ணிக்கையில் உள்ள கொடியின் நிறங்கள் யாவை?

1) மஞ்சள், ஊதா 2) ஊதா, வெள்ளை 3) வெள்ளை, மஞ்சள்

13) ஒரு பாத்திரத்தில் 3 சிவப்பு, 3 நீலம், 3 மஞ்சள் ஆகிய நிறப்பந்துகள் உள்ளன. ஒரே நிறத்தில் 3 பந்துகளை நிச்சயமாகப் பெற வேண்டுமெனில் வெளியே எடுக்கப்பட வேண்டிய குறைந்தபட்ச பந்துகள் எத்தனை?

1) 6 2) 7 3) 5

www.lkedu.lk

14) 


படத்தில் காட்டப்பட்டுள்ள நட்சத்திரம் 12 ஒத்த முக்கோணிகளைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. நட்சத்திரத்தின் சுற்றளவு 36 cm ஆகும். எனின் நிழற்றப்பட்ட பகுதியின் சுற்றளவு யாது?

(1) 24 cm

(2) 18 cm

(3) 30 cm

15) **கீழே தரப்பட்ட எண்கோலத்தில் வெற்றுச் சதுர அடைப்பில் வரும் எண்ணைத் தெரிவு செய்க?**



(1) 8

(2) 14

(3) 10

16) சீதா 1 மணித்தியாலத்தில் 16 பூக்களைச் செய்தாள். நிது 15 நிமிடத்தில் 4 பூக்களைச் செய்தாள். ராதா 30 நிமிடத்தில் 8 பூக்களைச் செய்தாள். அதன்படி, பின்வரும் கூற்றுக்களில் சரியான கூற்றைத் தெரிவு செய்க.

(1) மூவரும் ஒரே வேகத்தில் பூக்களைச் செய்வார்கள்.

(2) சீதா கூடிய வேகத்தில் பூக்களைச் செய்வாள்.

(3) நிதுவை விட கூடிய வேகத்தில் ராதா பூக்களைச் செய்வாள்


17) A, B நகரங்களுக்கிடையே உள்ள தூரம் 18 km ஆகும். ஒரு குறித்த நாளில் மு.ப 6.00 இற்கு கண்ணன் A இலிருந்து ஆரம்பித்து மணித்தியாலத்திற்கு 4km என்னும் வீதத்தில் Bஐ நோக்கிச் செல்கிறான். குமார் அதே நேரத்தில் B இலிருந்து ஆரம்பித்து மணித்தியாலத்திற்கு 2km என்னும் வேகத்தில் Aஐ நோக்கிச் செல்கிறான்.



கண்ணனும், குமாரும் சந்திப்பது A இலிருந்து

(1) 12 km தூரத்தில் (2) 9 km தூரத்தில் (3) 10 km தூரத்தில்

18) தீக்குச்சிகளைக் கொண்டு உருவாக்கப்பட்ட கணிதச் செய்கை தவறானது. அதனைச் சரி செய்வதற்கு எத்தனை தீக்குச்சிகளை இடமாற்றம் செய்ய வேண்டும்?



1) 1

2) 3

3) 2

www.lkedu.lk

LEARNEASY

KNOWLEDGE IS POWER

தமிழ் & English Medium

தரம் 01 முதல் A/L

வரையான வகுப்புக்கள்

ZOOM ஊடாக நடைபெறுகின்றன



தரம் 01 முதல் 05 வரை

- தமிழ்
- கணிதம்
- ஆங்கிலம்
- சுற்றாடல்
- நுண்ணறிவு
- வினாத்தாள் வகுப்பு
- பேச்சு ஆங்கிலம்
- பேச்சு சிங்களம்



தரம் 06 முதல் O/L வரை


- தமிழ்
- கணிதம்
- ஆங்கிலம்
- விஞ்ஞானம்
- வரலாறு
- வர்த்தகம்
- ICT
- English Literature
- தமிழ் இலக்கியநயம்
- சுகாதாரம்
- புவியியல்
- குடியியல்

76667-4945

19) கடிகாரமொன்று மணித்தியாலத்துக்கு நான்கு நிமிடங்கள் பிந்தி ஓடுகின்றது. அக் கடிகாரத்தில் காலை ஏழு மணிக்கு சரியான நேரம் வைக்கப்பட்டதெனில் மாலை ஏழு மணிக்கு அக்கடிகாரம் காட்டும் நேரம் யாது?


(1) 6 மணி 12 நிமிடம் (2) 5 மணி 24 நிமிடம் (3) 6 மணி 34 நிமிடம்

20) 50 cm நீளமும், 35cm அகலமும் உடைய காட்போட் அட்டை ஒன்றிலிருந்து (A) 5cm நீளமும், 4cm அகலமும் உடைய (B) எத்தனை சிறிய செவ்வகங்களை ஆகக் கூடுதலாக வெட்டி எடுக்கலாம்?



(1) 80
(2) 84
(3) 87

21) தரப்படுகின்ற உருவிற்கமைய கீழுள்ள சரியான கூற்றை காட்டும் விடையினை தெரிவு செய்க.



(1) முக்கோணங்களின் எண்ணிக்கையும் வட்டகங்களின் எண்ணிக்கையும் ஒன்றுக்கொன்று சமமாகும்.

(2) முக்கோணங்களின் எண்ணிக்கையும் சதுரங்களின் எண்ணிக்கையும் ஒன்றுக்கொன்று சமமாகும்.

(3) வட்டங்களின் எண்ணிக்கையின் இருமடங்கு செவ்வகங்களின் எண்ணிக்கை காணப்படுகின்றன.

கீழ்த் தரப்படும் கவிதையை வாசித்து 22 ஆம் வினாவிற்கான விடையினைத் தெரிவு செய்க.

சின்னஞ் சிறுவில்லாய்க் கண்டதம்மா! பின்னர்
செம்பொற் குடம்போல தோன்றுதம்மா!'
என்ன அதிசயம் பாராயம்மா! - ஈதோர்
இந்திர சாலமோ கூறாயம்மா!


22) செம்பொற் குடம் போல தோன்றுதம்மா எனக் கவிஞர் குறிப்பிடும் நாள் எது?

(1) அமவாசையை (2) பௌர்ணமியை (3) கிரகணம்


www.lkedu.lk

23) இவ்வுருவில் உள்ள அரை வட்டங்களின் எண்ணிக்கை எத்தனை?

(1) 10 (2) 12 (3) 8



24) முதலில் தரப்பட்ட சிறிய சதுரமுகிகளின் எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கையில் அமைந்த சதுரமுகிகளைக் கொண்ட விடையினைத் தெரிவு செய்க.



(1) (2) (3)

25) உருவில் காட்டப்பட்டுள்ள வலையமைப்பில் முதலாவது நிரையையும் மூன்றாவது நிரையையும் ஒன்றோடொன்று மாற்றி பெறுகின்ற வலையமைப்பில் இருந்து முதலாவது நிரலையும் மூன்றாவது நிரலையும் ஒன்றோடொன்று மாற்றிப் பெறும் வலையமைப்பு எவ்வாறு மாற்றமடைந்து காணப்படும் என்பதை தெரிவு செய்க?

1	2	3
4	5	6
7	8	9

உரு

(1)

7	8	9
4	5	6
1	2	3

(2)

9	8	7
6	5	4
3	2	1

(3)


9	8	7
4	5	6
3	2	1


26) 

காலையில் சிறுவனொருவன் வீடு நோக்கிச் செல்லும் போது நிழலும் அவனுக்கு முன்னாலேயே செல்வதனை உரு காட்டுகின்றது. இதற்கமைய சிறுவனின் வீடு எத்திசையில் அமைந்துள்ளது.

(1) வடக்கு (2) கிழக்கு (3) மேற்கு

27) மேசையொன்றில் ஒவ்வொரு நிறத்திலுமுள்ள தொப்பிகளின் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.





அம்புக்குறியினால் காட்டப்படுவனவற்றின் கருத்து


அதிகம் ← குறைவு குறைவு → அதிகம்

இதன்படி அம் மேசையில் அதிகமாக இருப்பது.

(1) சிவப்பு நிறத் தொப்பிகள் (2) நீலநிறத் தொப்பிகள் (3) மஞ்சள்நிறத் தொப்பிகள்

www.ikedu.lk

28) அம்புக்குறிகளின் மூலம் காட்டப்படும் பாதைகள் வழியே A இலிருந்து B வரைக்கும் செல்வதற்கான மிகக் குறுகிய பாதையைக் காட்டும் உரு யாது?



29) இலங்கைக்கு மேற்கே இங்கிலாந்தும் கிழக்கே யப்பானும் உள்ளன. இலங்கையில் நேரம் நண்பகல் 12.00 ஆக இருக்கும் போது,

1) இங்கிலாந்தில் முற்பகலாக இருக்க வேண்டும்.


2) யப்பானில் முற்பகலாக இருத்தல் வேண்டும்.

3) யப்பான், இங்கிலாந்து ஆகிய இரு நாடுகளிலும் பிற்பகலாக இருத்தல் வேண்டும்.

30) மாப்பொருள், உணவு, கிழங்கு, ஈரப்பலாக்காய் என்பவற்றின் தொடர்பைக் காட்டும் உரு எது?

1) 

2) 

3) 

31) ஆண்டில் சில மாதங்களுக்கு 31 நாட்களும் வேறு சில மாதங்களுக்கு 30 நாட்களும் உள்ளன. அவ்வாறெனின் 28 நாட்கள் உள்ள மாதங்களின் எண்ணிக்கை யாது?

1) 1 2) 2 3) 12

32) நிதுவிடம் ரூபாய் 100, ரூபாய் 50, ரூபாய் 20 நாணயத்தாள்கள் மாத்திரம் ரூபாய் 250 உண்டு. அவளிடம் உள்ள ரூபாய் 20 தாள்களின் எண்ணிக்கை யாது?

1) 4 2) 5 3) 8

33) சர்மிலாவின் தங்கை கரணி ஆகும். அவளுக்கு சகோதரர்கள் இரண்டு பேரும் சகோதரிகள் இரண்டு பேரும் உள்ளனர். சர்மிலாவிற்கு இருக்கும் சகோதர சகோதரிகளின் எண்ணிக்கை முறையே,


(1) 2 மற்றும் 3 (2) 1 மற்றும் 3 (3) 2 மற்றும் 2

34) இந்த பெரிய சதுரத்தின் சுற்றளவு நிறந்தீட்டப்பட்ட சிறிய சதுரத்தின் சுற்றளவு போன்று எத்தனை மடங்காகும்?

(1) இரண்டு மடங்கு

(2) மூன்று மடங்கு

(3) நான்கு மடங்கு



www.lkedu.lk

35) கீழே தரப்பட்டுள்ள உரோம இலக்கங்களை இறங்கு வரிசைப்படுத்துவதற்காக எத்தனை இலக்கங்களை இடம் மாற்ற வேண்டும்?

IX	X	VII	V	VI	III	I

(1) 4 (2) 3 (3) 5

36) 12 cm நீளமும் 8 cm அகலமும் 8 cm உயரமும் உடைய கண்ணாடித் துண்டிலிருந்து 2 cm நீளம், அகலம், உயரம் உடைய எத்தனை சிறிய சதுரமுகிக் கண்ணாடிக்குற்றிகளை வெட்டலாம்?

(1) 96 (2) 24 (3) 48

37) மஹுதி புத்தகமொன்றில் அரைவாசிப் பகுதியை முதல் நாளிலும் எஞ்சியதன் அரைவாசிப் பங்கினை இரண்டாம் நாளிலும் எஞ்சியதை மூன்றாம் நாளிலும் வாசித்து முடித்தாள். அவள் மூன்றாம் நாள் வாசித்த பக்கங்களின் எண்ணிக்கை 20 எனின் அப்புத்தகத்தில் உள்ள தாள்களின் எண்ணிக்கை யாது?

(1) 80 (2) 40 (3) 160

38) 45 தொடக்கம் 55 வரையான 5 இன் மடங்குகளைக் கொண்ட எண்களை எழுதும் போது இலக்கம் 5 எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை

(1) எட்டு ஆகும். (2) நான்கு ஆகும். (3) ஆறு ஆகும்.

39) பாத்திரம் ஒன்றில் 10 பச்சை நிற இனிப்புக்களும். 5 மஞ்சள் நிற இனிப்புக்களும், 2 சிவப்பு நிற இனிப்புக்களும், 15 பச்சை நிறமல்லாத இனிப்புக்களும் காணப்பட்டன. எனின், பாத்திரத்தில் உள்ள இனிப்புக்களின் எண்ணிக்கை யாது?

(1) 32 (2) 25 (3) 22

40) A,B,C ஆகியன சம அளவு நீர் உள்ள மூன்று பாத்திரங்கள் ஆகும். கீழே தரப்பட்டுள்ள மூன்று படிமுறைகளையும் முறையே கருதிப் பார்க்க.

பாத்திரம் A இல் உள்ள நீரில் அரைவாசியை பாத்திரம் B யில் இடுதல்.
அடுத்ததாக பாத்திரம் B இல் உள்ள நீரில் அரைவாசியைப் பாத்திரம் c இல் இடுதல்.
பின்னர் பாத்திரம் C இல் உள்ள நீரில் அரைவாசியை பாத்திரம் A இல் இடுதல்.

இப்போது ஒவ்வொரு பாத்திரத்திலும் உள்ள நீரின் அளவுக்கேற்ப ஏறுவரிசை யாது?

(1) A,BC (2) B,C,A (3) C,A,B

www.lkedu.lk

Learn Easy

76667-4945

zoom

வரலாறு ONLINE CLASS

தரம் 06	தரம் 07	தரம் 08
Wed & Fri *7.00 pm*	Wed & Fri *8.00 pm*	Mon & Tue *6.00 pm*

தரம் 09	தரம் 10	தரம் 11
Mon & Thur *8.00 pm*	Tue 8.00 pm Fri 6.00 pm	Tue & Thur *9.00 pm*



By

V.MOHAN

COMMERCIAL BANK | PEOPLE'S BANK | BANK OF CEYLON BOC | eZ Cash

Easy to Learn(Pvt) Ltd Wellawatte 8008392295	S.Kishokumar Jaffna University 162 2001 7002 8670	S.Kishokumar Nelliyaddy Branch 86479603	0766674945

வலயக் கல்வி அலுவலகம் - மட்டக்களப்பு

2026 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான கணிப்பீடு – 02

பகுதி - ii

சுட்டெண் :..... நேரம்: 1மணித்தியாலயம்

பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்குரிய அறிவுறுத்தல்கள்

- உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத் தாளிலேயே எழுதுக.(சில வினாக்களுக்கு உப பகுதிகள் உள்ளன)
- விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும். (பயன்படுத்தவும்)

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்தம்	
இறுதிப்புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/II/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/II/T
மதிப்பீட்டு புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/II/T
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும்.	V/II/T

www.lkedu.lk

01) பின்வரும் பந்தியை வாசித்து 1 தொடக்கம் 7 வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.

இந்த ஆகாயம் கடலைப் போலத் தோன்றுகிறது. அந்தக் கடலிலே வெள்ளியாற் செய்த தோணி ஒன்று மிதந்து செல்வது போல சந்திரன் காணப்படுகிறது. வானத்திலுள்ள நட்சத்திரங்கள் கடலிலுள்ள மீன்களைப் போல பரவுகின்றன. இந்த அழகிலே என் மனம் மிகவும் மகிழ்கிறது.

1) "திங்கள்" என்பதன் ஒத்த சொல் யாது?.....

2) எதனால் செய்யப்பட்ட தோணி என பந்தியில் குறிப்பிடப்படுகிறது?

.....

3) ஆகாயம் எதனைப் போல் தோன்றுகின்றது?.....

4) மீனை என்பதன் பன்மை வடிவத்தை எழுதுக? .....

5) கடலிலுள்ள மீன்களைப் போல பரவுபவை எவை?.....

6) அ.்றிணைப் பன்மை வினைச்சொல்லை எழுதுக?.....

7) பந்தியில் உள்ள உயர்திணை தன்மை ஒருமைச் சொல் யாது? .....

02) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் எழுதுக.

1) பறவைகள் கூட்டம் கூட்டமாகப் பறந்து சென்றன. ( )
2) மாணவர்கள் வேகமாகப் பாடசாலைக்குச் செல்கின்றனர். ( )
3) காற்று வேகமாக வீசியதால் மரங்கள் ஒன்றுடன் ஒன்று உரசின. ( )

03) பின்வரும் இணைமொழிகளை பூர்த்தி செய்க.

1) கண்ணும் .....
2) உயர்வு .....

04) பின்வரும் சுருக்கக்குறியீட்டிற்கான விரிவாக்கத்தினை எழுதுக.

1) ம.ப.பா - .....

2) இ.மி.ச - .....

05) சேர்த்தெழுதுக.

1) மண் + குடம் = ... 2) பல் + பொடி =.....

06) சரியான விடையைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.

1) அவள் சிறந்த ஓட்ட ..... (வீராங்கனை, வீராங்கணை)
2) அவன் கொண்டு வந்த பொருள் ..... (கனமாக, கணமாக) இருந்தது.
3) ..... (அவர்கள், அவர்) மேசையில் தொலைபேசியை வைத்தார்.
4) பாலாவுடன் சேர்ந்து சுனில் தேசிய கீதத்தைப் ..... (பாடினார்கள், பாடினான்)

www.ikeau.lk

07) பின்வரும் கருத்தைத் தரும் பழமொழியை எழுதுக.

1) மனச்சாட்சி உறுத்தும்.

.....

2) கவர்ச்சியானவை எல்லாம் நல்லவை அல்ல.

.....

08) தொடர்மொழிக்குரிய ஒருமொழியை எழுதுக.

1) வீண் செலவு செய்பவன். - .....

2) இலை, தழை கொண்டு வேயப்பட்ட குடிசை - .....

09) பேச்சுவழக்கில் தரப்பட்ட வாக்கியத்தை எழுத்து வழக்கில் மாற்றி எழுதுக.

1) நாங்கள் வாறோம் - .....

2) மழை பெய்யுது - .....

10) பின்வரும் ஆண்பால் வாக்கியத்தை பெண்பால் வாக்கியமாக மாற்றி நிகழ்காலத்தில் எழுதுக.

1) அரசன் அரண்மனைக்குச் சென்றான்.

.....


2) அவன் நேற்று மாமா வீட்டிற்குச் சென்றான்.

.....

11) பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.

1) Class room - ..... 2) Eyes - .....

12) பின்வரும் படங்களுக்குரிய ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களில் எழுதுங்கள்.



.....



.....

13) பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.

1) பொல கொஹேத? - .....

14) பின்வரும் சொற்கள் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

1) அதிபர் அலுவலகம் - ..... 2) நண்பன் -.....

www.lkedu.lk

15) 9, 0, 1, 7 ஆகிய இலக்கங்களைப் பயன்படுத்தி மிகச் சிறிய நான்கிலக்க எண்ணை உருவாக்குக.

.....

16) 2000 + 300 + 10 + 6 என்பதால் வகைக்குறிக்கப்படும் எண்ணின் எண்பெயரை எழுதுக.

.....

17) 15 இலிருந்து 6 ஐக் கழித்து வரும் விடையை உரோமன் இலக்கத்தில் எழுதுக.

.....

18) கீழே தரப்பட்ட எண்களை இறங்கு வரிசையில் எழுதும் போது நடுவில் வரும் எண்ணை எழுதுக?

4507, 2325, 1234, 1576, 6175 .....

19) கீழே தரப்பட்ட எண்கோலத்தில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

1) 20, 25, 31, 38, ...

2) 100, 96, 92, 88, ...

20) 174 பென்சில்களை 6 மாணவர்களிடையே சமனாகப் பகிர்ந்தால் ஒருவருக்குக் கிடைக்கும் பென்சில்கள் எத்தனை?


.....

21) 180 மாம்பழங்களில் $\frac{2}{6}$ பங்கு மாம்பழங்கள் விற்கப்பட்டதன் பின்னர் எஞ்சும் மாம்பழங்கள் எத்தனை?


.....

22) கடிகாரம் காட்டுவது முற்பகல் நேரம் எனின் அந்நேரத்தை நியம நேரமாக எழுதுக.

.....



23) கீழே உள்ள உருவில் உள்ள விளிம்புகளின் எண்ணிக்கை எத்தனை?



.....

www.lkedu.lk

Learn Easy

76667-4945

zoom

கணிதம் ONLINE CLASS



By

சு.கிரிசாந்தினி

தரம் 06	தரம் 07	தரம் 08
Mon & Wed *8.00 pm*	Tue & Thu *8.00 pm*	Mon & Wed *7.00 pm*

தரம் 09	தரம் 10	தரம் 11
Sat & Sun *8.00 pm*	Tue, Fri & Sat *9.00 pm*	Mon, Wed & Sun *9.00 pm*

COMMERCIAL BANK | PEOPLE'S BANK | BOC | eZ Cash

Easy to Learn(Pvt) Ltd Wellawatte 8008392295	S.Kishokumar Jaffna University 162 2001 7002 8670	S.Kishokumar Nelliyaddy Branch 86479603	0766674945

24) பாடசாலைக்கும் நிதுவின் வீட்டிற்கும் இடையிலான தூரம் 15km 600m ஆகும் அதில் 9 km 800m தூரத்தைப் பேருந்திலும். எஞ்சிய தூரத்தை நடந்தும் சென்றான். எனின் அவன் நடந்து சென்ற தூரம் யாது?


..... km ..... m

25) பாத்திரமொன்றில் 408 தாமரைப்பூக்கள் வீதம் 4 பாத்திரங்களிலுள்ள தாமரைப்பூக்களின் மொத்த எண்ணிக்கை யாது?

.....

26) முழு உருவின் அரைப்பகுதிக்கு நிறந்தீட்ட வேண்டுமாயின் மேலும் எத்தனை கட்டங்களுக்கு நிறந்தீட்ட வேண்டும்?

.....



27) சியானா ஒரு சட்டையை வாங்குவதற்காக கடைக்குச் சென்றாள். சட்டையின் விலை 1950.00 ரூபாய் ஆகும். ஆயினும் அவளிடம் 925.00 ரூபாய் மாத்திரம் இருந்தது எனில் அதனை வாங்குவதற்கு அவளுக்கு மேலும் எவ்வளவு பணம் தேவை?

.....ரூபாய்

28) ஒரு தாங்கியில் 18l 580ml நீர் இருந்தது. அதில் மேலும் 4l 475ml நீரை ஊற்றிய போது தாங்கி முற்றாக நிரம்பியது. எனின் தாங்கியின் கனவளவு யாது?

..... l ..... ml

29) இவ்வுருவிற்கு வரையக்கூடிய சமச்சீர் அச்சுக்களை வரையுங்கள்?



30 தொடக்கம் 59 வரையான வினாக்களில் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

30) பகவத்கீதையை புனிதநூலாகக் கொண்ட மதத்தவர் யார்?

1) இந்துக்கள் 2) இஸ்லாமியர்கள் 3) பௌத்தர்கள்

31) ஒலிம்பிக் போட்டியில் முதன் முதலில் இலங்கைக்கு பதக்கத்தை பெற்றுத் தந்தவர்?

1) சுதந்திகா ஜெயசிங்க 2) டங்கன் வைற் 3) குமார் சங்கக்கார

32) இலங்கையின் தேசிய விளையாட்டை விளையாடும் வீரர்களின் எண்ணிக்கை?

1) 8 2) 6 3) 7

www.ikeau.lk

33) பின்வரும் எந்த விளையாட்டில் கைக்கவசம், காற்கவசம் அணியப்படுகின்றன?

1) எல்லே 2) கரப்பந்து 3) கிரிக்கற்

34) உடலை நோயில் இருந்து பாதுகாப்பதற்காக உண்ணும் போசணை எது?

1) புரதம் 2) விற்றமின்கள் 3) மாப்பொருள்

35) தியானச் செயற்பாட்டின் மூன்றாவது படிமுறை.

1) திடசித்தம் 2) பிரார்த்தனை 3) மலர்வு

36) பின்வருவனவற்றுள் கொடிவகைத் தாவரம் அல்லாதது எது?

1) மல்லிகை 2) காக்கணம் 3) பவள மல்லிகை

37) முலையூட்டி விலங்கு.

1) உடும்பு 2) கீரி 3) முதலை

38) ஆறு கால்களை உடைய பிராணி அல்லாதது.

1) வண்டு 2) நுளம்பு 3) சிலந்தி

39) இலங்கையில் காணப்படும் வணக்கத்துக்குரிய அல்லாத பிரசித்தி பெற்ற இடம்.

1) ருவன்வெலிசாய 2) சிவனொளிபாதம் 3) காலிக்கோட்டை

40) அசுத்தமான நீரைப் பருகுவதால் ஏற்படும் நோய் எது?

1) நெருப்புக்காய்ச்சல் 2) டெங்கு 3) மாலைக்கண்

41) இலைகளை இணைத்துக் கூடமைக்கும் பிராணி.

1) மரங்கொத்தி 2) தேனீ 3) செவ்வெறும்பு

42) பழுதடைந்ததும் நீல நிறமாக மாறும் கிழங்கு.

1) உருளைக்கிழங்கு 2) மரவள்ளிக்கிழங்கு 3) கரட்

43) தேசப்படங்களில் மலைகளைக் குறித்துக் காட்டப் பயன்படும் நிறம்.

1) கறுப்பு 2) பச்சை 3) கபிலம்

44) மாலை நேரத்தில் மலரும் பூ அல்லாதது.

1) அந்திமந்தாரை 2) ஆம்பல் 3) வெட்சி

45) அதிக வித்துக்களைக் கொண்ட பழம் அல்லாதது.

1) ஆனைக்கொய்யா 2) பப்பாசி 3) பலாப்பழம்

46) தியானச் செயற்பாடுகளைச் செய்வதால் கிடைக்கும் நன்மைகளில் ஒன்று.

1) பதற்றம், மனப்பயம் அதிகரிக்கும்.
2) பல்வேறு நோய்கள் ஏற்படும்.
3) மன அமைதியின்மையைக் கட்டுப்படுத்தலாம்.

www.lkedu.lk

47) வித்துக்கள் மூலம் கன்றுகளை பெறக்கூடிய தாவரம் யாது?

1) கரட் 2) மரவள்ளி 3) வற்றாளை

48) தரப்பட்ட குறியீடு குறிப்பது.



1) முன்னால் பாதசாரிக் கடவை.
2) முன்னால் சிறுவர் கடவை.
3) பாதசாரிகள் கடவை.

49) இலங்கை நாட்டிற்கே உரித்தான பறவை எது?

1) கிளி 2) காட்டுக்கோழி 3) மயில்

50) கற்செதுக்கல்களுக்கு பிரசித்தமான இடம்.

1) சீகிரியா 2) காலிக்கோட்டை 3) இகுறுமுனிய

51) இலங்கையின் தேசிய விளையாட்டு.

1) கிறிக்கற் 2) கிட்டிப்புள் 3) வொலிவோல்

52) ஈயின் மூலம் நோய்க்கிருமிகள் எமது உடலினுள் செல்வதால் ஏற்படும் நோய்?

1) சிக்குன்குன்யா 2) கழிச்சல் நோய் 3) கொள்ளை நோய்

53) இரவில் நடமாடும் பிராணியாக அமையாதது.

1) ஆந்தை 2) குரங்கு 3) வெளவால்

54) பின்வரும் மாவட்டங்களில் தென் மாகாணத்தில் உள்ள மாவட்டம் எது?

1) மாத்தளை 2) மொனறாகலை 3) மாத்தறை

55) பின்வரும் உபகரணங்களில் தச்சன் பயன்படுத்தும் உபகரணம்.


1)


2)


3)

56) மாணிக்கக்கல் அகழ்வோர் பயன்படுத்தும் உபகரணத்திற்கு வழங்கப்படும் பெயர் யாது?

1) துருத்தி 2) அத்தாங்கு 3) நாம்புவ

57) உணவுக் கழிவுகளை இட வேண்டிய குப்பைத் தொட்டியின் நிறம் யாது?

1) சிவப்பு 2) பச்சை 3) செம்மஞ்சள்

www.lkedu.lk

58) சூரிய ஒளியில் உள்ள நிறங்களைக் கொண்ட விடை யாது?

1) சிவப்பு, பச்சை, கறுப்பு, கருநீலம், ஊதா, செம்மஞ்சள், மஞ்சள்
2) சிவப்பு, செம்மஞ்சள், மஞ்சள், பச்சை, நீலம், கருநீலம், ஊதா
3) சிவப்பு, இளஞ்சிவப்பு, மஞ்சள், பச்சை, நீலம், கருநீலம், ஊதா

59) 'பனிக்கட்டியை நீரில் இட்டால் நிகழாத மாற்றம்.

1) பனிக்கட்டி நீரில் கரையும் 2) நீர் குளிர்ச்சியடைதல் 3) நீரின் நிறம் மாறுதல்

60) "பாடசாலை தவணை இறுதி விடுமுறை காலத்தை நான் கழித்த விதம்" எனும் தலைப்பில் ஐந்து சொற்களுக்குக் குறையாமல் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக் கூட்டலும் சரியாக அமைதல் வேண்டும்.

1).....

.....

2).....

.....

3).....

www.lkedu.lk